ශීර්ෂ අංක 04 - කාර්ය සාධන වාර්තාව 2025

උපරිමාධිකරණ විනිශ්චයකාරවරු

செயலாற்றுகை அறிக்கை 2025 - செலவினத் தலைப்பு 04

உயர் நீதிமன்ற நீதியரசர்கள்

PERFORMANCE REPORT 2025 – HEAD 04

Judges of the Superior Courts

2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
உயர் நீதிமன்ற நீதியரசர்கள் - செலவினத் தலைப்பு இல. 04

<u>உள்ளடக்கம்</u>

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

அத்தியாயம் 03 - வருடத்திற்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள்

அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனிதவள விவரம்

அத்தியாயம் -7 - இணக்க அறிக்கை

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/ நிறைவேற்றுப் பொழிப்பு

1.a உயர் நீதிமன்றம்

1. a1 அறிமுகம்

இலங்கை நீதிமன்ற முறைமையிலுள்ள உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்றமாகும். இது பிரதம நீதியரசர் மற்றும் 16 உயர் நீதிமன்ற நீதியரசர்களைக் கொண்டதாகும். இவர்கள் அனைவரும் அதிமேதகு ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர். ஏனைய சகல நீதிமன்றங்கள் தொடர்பாக மேன்முறையீட்டு நியாயாதிக்கம் உயர் நீதிமன்றத்துக்கு உரித்தாவதுடன், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தின் தத்துவம் செயற்படுத்தப்படுகின்றது.

1. a2 நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்ட வரைவுத்திட்டம் (சட்டம், நம்பிக்கை, ஏனையவை)

இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் XVI மேனிலை நீதிமன்றங்கள் என்ற அத்தியாயத்தின் கீழ் உயர் நீதிமன்றத்தின் பொது நியாயாதிக்கம் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதன் அரசியலமைப்பு சார்ந்த நியாயாதிக்கம் 118 முதல் 136 வரையான உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

20 ஆம் திருத்தத்தினால் மேலே குறிப்பிட்ட யாப்பின் 119 ஆம் உறுப்புரை திருத்தப்பட்டு உயர் நீதிமன்றமானது பிரதம நீதியரசர் மற்றும் 06 க்கு குறையாத 16 க்கு மேற்படாத நீதியரசர்களைக் கொண்டிருக்குமென திருத்தப்பட்டது.

அந்த வகையில் பதிவாளர் உச்ச நீதிமன்றங்களின் நீதியரசர்களுக்கான செலவினத் தலைப்பின் தவைராகவும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் தொழிற்படுவதுடன், அரசியலமைப்பின் 135 ஆம் உறுப்புரைக்கு அமைவாக அவர் பிரதம நீதியரசரின் கண்காணிப்புக்கும் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் கீழ்பட்டவர்.

1.a3 நிறுவனத்தின் குறிக்கோள்

அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கேற்ப நீதித்துறையின் வினைத்திறன்மிக்க நிருவாகம்

1. a4 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

‘‘அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களை நடைமுறைப்படுத்தி வினைத்திறனுடன் நீதி நிருவாக செயற்பாட்டை செயற்படுத்தி இலங்கை மக்களின் நம்பிக்கையை பாதுகாத்தலும் அதனூடாக மக்களை மேம்படுத்தலும்’’

மிகவும் குறுகிய காலத்தினுள் நியதிச்சட்டத் தத்துவங்களை நடைமுறைப்படுத்தி நீதியை நிருவகித்தல்.

அரசியலமைப்பினால் உயர்நீதிமன்றத்துக்கு பின்வரும் தத்துவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- அடிப்படை உரிமைகள் தொடர்பான நியாயாதிக்கம்.
- இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கம்.
- அறிவுறுத்தல் நியாயாதிக்கம்.
- ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மனு தொடர்பான நியாயாதிக்கம்.
- ஏதேனும் முறையிலான பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பான நியாயாதிக்கம்.
- பாராளுமன்றத்தினால் சட்டத்தின் மூலம் உரித்தாக்கப்படுகின்ற நியாயாதிக்கம்.

1. a5 பிரதான செயற்பாடுகள்

- அரசியல் யாப்பு செயற்பாடு தொடர்பான நீதிமன்ற நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- அடிப்படை உரிமைகள் தொடர்பான நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- இறுதி மேன்முறையீட்டு நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- அறிவுறுத்தல் நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- தேர்தல் ஆட்சேபனை மனு (ஜனாதிபதி தேர்தல்) தொடர்பான நியாயாதிக்கத்தையும், ஏதேனும் முறையிலான பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பான நியாயாதிக்கத்தையும் நடைமுறைப்படுத்துதல்.
- சட்டத்தின்மூலம் பாராளுமன்றம் உரித்தாக்கும் அல்லது ஆணையிட்டளிக்கும் அத்தகைய வேறு கருமங்கள் தொடர்பிலான நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்துதல்.
- சட்டத்தரணிகளை சேர்த்துக்கொள்ளுதல், இடைநிறுத்துதல் மற்றும் நீக்குதல்.

இச்செலவுத் தலைப்பின் கீழ் உயர் நீதிமன்ற கௌரவ நீதியரசர்களின் சம்பளம் மற்றும் வேதனங்கள், ஏனைய மீண்டெழும் செலவினங்கள், மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு மற்றும் வெளிநாட்டு மாநாடுகள் மற்றும் கூட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு என்பன உள்ளடங்குகின்றன.

1. a 6 நிறுவன வரைபடம் - உயர் நீதிமன்றம்

பொருந்துவதில்லை.

1.a 7 வெளிநாட்டு உதவி கிடைக்கும் செயற்றிட்டங்களின் விபரங்கள்.

ஒன்றுமில்லை.

1.b மேன்முறையீட்டு நீதிமன்றம்

1.b.1 அறிமுகம்

அரசியலமைப்பின் 137 ஆவது உறுப்புரையின் மூலம் நிறுவப்பட்டுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றமானது இலங்கை நீதிமன்ற முறைமையில் இரண்டாவது மேன்நிலை நியாயாதிக்கத்தை நடைமுறைப்படுத்தும் நீதிமன்ற முறைமையாகும்.

மேன்முறையீட்டு நீதிமன்றமானது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் தலைமையில் 20 கௌரவ நீதிபதிகளை கொண்டுள்ளது.

ஏதேனும் முதனிலை நீதிமன்றத்தால், நியாயசபையால் அல்லது வேறு நிறுவனத்தால் புரியப்பட்டதான நிகழ்வுப் பிழைகள் அல்லது சட்டப் பிழைகள் எல்லாவற்றையும் திருத்துவதற்கான மேன்முறையீட்டு நியாயதிக்கத்தையும் எழுத்தாணை மற்றும் தடையீட்டெழுத்தாணை என்பவற்றை பிறப்பிக்கும் தத்துவத்தையும் பாராளுமன்றத் தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் தத்துவத்தையும் முதநிலை நீதிமன்றங்களின் வழக்குப்பதிவேடுகளை பரிசோதனையிடும் தத்துத்தையும் கட்டுக்காவலிலுள்ளவர்களை நீதிமன்றத்தின் முன் கொண்டுவருவதற்கும் விட்டுவிடுவதற்குமான அதிகாரத்தையும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமைவாக நடைமுறைப்படுத்துதல்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் சாதாரணமாக அதன் நியாயாதிக்கத்தை கொழும்பிலேயே பிரயோகிக்குமென்பதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு நீதிபதிகளின் ஏகமானதான முடிவொன்றாக இல்லாதிருப்பின் அது வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளுள் பெரும்பான்மையோரின் முடிவாக இருக்கும்.

மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவகம் மேன்முறையீட்டு நீதிமன்றப் பதிவாளர் எனப் பதவிப்பெயருடைய அலுவலரொருவரின் பொறுப்பில் இருப்பதுடன், அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரின் கண்காணிப்புக்கும் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் கீழ்பட்டவர்.

1. b 2 நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்ட வரைவுத்திட்டம் (சட்டம், நம்பிக்கை, ஏனையன)

1978 ஆம் ஆண்டு இலங்கை சனநாயக சோசலிஸக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் XVI மேனிலை நீதிமன்றங்கள் என்ற அத்தியாயத்தின் 137 ஆம் உறுப்புரையின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றம் விபரிக்கப்பட்டுள்ளதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் 138 ஆம் உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 139 முதல் 147 வரையான உறுப்புரைகளில் அதன் தொழிற்பாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன.

மேலே கூறப்பட்ட அரசியலமைப்பின 20 ஆம் திருத்தத்தின் பிரகாரம் 137 ஆம் உறுப்புரை மேன்முறையீட்டு நீதிமன்றமானது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரையும் ஆறு பேருக்குக் குறையாத பத்தொன்பது பேருக்கு அதிகமாகாத வேறு நீதிபதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும் எனத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.b. 3 நிறுவனத்தின் குறிக்கோள்

அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கேற்ப நீதித்துறையின் வினைத்திறன்மிக்க நிருவாகம்

1. b 4 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

''அடுத்த புதிய தசாப்தத்தில் நீதி நிருவாக செயற்பாட்டை வினைத்திறனுடன் நிறைவேற்றுதல்''.

கணிணி தொழிநுட்பத்தினைப் பயன்படுத்தி வழக்காடிகளுக்கு சிறந்த வசதிவாய்ப்புக்களை வழங்கும் விதத்தில் வினைத்திறனுடன் நீதி நிருவாகத்தை பிரயோகித்தல்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினூடாக நிறுவப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றமானது முதனிலை நீதிமன்றங்கள், தொழிலாளர் நியாயசபைகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட சபைகளின் தீர்ப்புக்கள் தொடர்பான மேன்முறையீட்டு மற்றும் மீள்நோக்கு தத்துவத்தைக் கொண்டுள்ளது. மேலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு எழுத்தாணை தொடர்பான நியாயாதிக்கமும் மேன்முறையீட்டு நியாயாதிக்கமும் உள்ளது. அத்துடன், 2002 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைகளின் போது பரஸ்பர ஒத்துழைப்பு வழங்கும் சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க குடியியல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் போது பரஸ்பர ஒத்துழைப்பு வழங்கும் சட்டங்கள் முதலியவற்றில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக தேவையான கட்டளைகளையும் சட்ட ஒழுங்குகளையும் வழங்குதல், மற்றும் ஏதேனுமொரு முதனிலை நீதிமன்றத்தின் அல்லது தொழிலாளர் நியாய சபைகளின் அல்லது ஏனைய நிறுவனமொன்றின் வழக்குப் பதிவேடுகளை சோதனையிடவும் அல்லது பரீட்சிப்பதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு தத்துவமும் அதிகாரமும் உண்டு.

1. b5 பிரதான செயற்பாடுகள்

- மேல் நீதிமன்றம் உட்பட முதனிலை நீதிமன்றங்களின் தீர்வுகளுக்கெதிரான முன்முறையீடுகளையும் மீள்நோக்கலையும் விசாரணை செய்தல்.
- ஏனைய நியதிச்சட்ட சபைகளுக்கெதிரான மேன்முறையீடுகளை விசாரணை செய்தல்.
- முதனிலை நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளை அந்நீதிமன்ற தத்துவமுள்ள நீதிமன்றமொன்றுக்கு மாற்றுவதற்கான விண்ணப்பத்தை பரிசீலித்தல்.
- நீதிமன்றத்தை அவமதித்ததல் தொடர்பாக விசாரணை செய்தல்.
- தேர்தல் முறைப்பாடுகளை விசாரணை செய்தல்.

1. b 6 நிறுவன வரைபடம்

பொருந்துவதில்லை.

1.b 7 வெளிநாட்டு உதவி கிடைக்கும் செயற்றிட்டங்களின் விபரங்கள். (ஏதேனுமிருப்பின்)

ஒன்றுமில்லை.

அத்தியாயம் 02 - முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

2.a உயர் நீதிமன்றம்

கிடைக்கத்தக்க மனிதவள மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்தும் நீதி நிருவாகத்தினை செயற்படுத்தியும் பொது மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதத்தில் உயர்நீதிமன்றத் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை அதிகபட்சளவில் நிறைவேற்றுதல்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தின் 2025.01.01 முதல் 2025.12.31 வரையிலான செயலாற்றுகை

வழக்குகளின் தன்மை	2025/01/01 ஆந் திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை	2025/01/01 முதல் 2025/12/31 வரை தாக்கல் செய்த வழக்குகளின் எண்ணிக்கை	2025/01/01 முதல் 2025/12/31 ஆந் திகதிக்கு தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2025/12/31 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதியாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை
அடிப்படை உரிமைகள் தொடர்பான விண்ணப்பங்கள்	1125	301	573	853
விஷேட மேன்முறையீட்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள்	922	399	462	859
பாராளுமன்ற சட்ட மூலங்கள் தொடர்பான உயர் நீதிமன்றக் கட்டளைகள்	0	31	29	02
மேன்முறையீட்டு வழக்குகள்	1114	292	372	1034
வணிக மேல் நீதிமன்ற மேன் முறையீட்டு வழக்குகள்	512	110	103	519
மேல் நீதிமன்ற மேன்முறையீட்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள்	288	124	176	236
எழுத்தாணை விண்ணப்பம்	14	67	78	3
குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம்	1396	406	625	1177
மீள்நோக்கு வழக்குகள்	5	4	1	8
அரசியலமைப்பின் பொருட் கோடல்கள் தொடர்பான வழக்குகள்	-	-	-	-
நானாவித வழக்குகள்	8	2	4	6
நீதாய நீதிமன்றத் தீர்ப்பு மேன்முறையீடுகள் (SC TAB Appeal)	3	3	2	4
விஷேட மேன்முறையீடுகள்	2	-	-	1
நீதிமன்றத்தை அவமதித்தல் வழக்குகள்	6	7	8	5
சட்ட விதி வழக்குகள் (Rule)	23	3	13	13
சட்டத்தரணிகளை நீக்கும் வழக்குகள்	3	-	-	3
துரிதப்படுத்தல் வழக்குகள்	1	-	-	1
மொத்தம்	**5422**	**1749**	**2446**	**4724**

உயர் நீதிமன்றத்தில் தாக்கலிட்ட மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் தொடர்பான அறிக்கை

வழக்குகளின் தன்மை	2025/01/01 ஆந் திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை	2025/01/01 முதல் 2025/12/31 வரை தாக்கல் செய்த வழக்குகளின் எண்ணிக்கை	2025/01/01 முதல் 2025/12/31 ஆந் திகதிக்கு தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2025/12/31 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதியாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை
பாராளுமன்ற சட்ட மூலங்கள் தொடர்பான உயர் நீதிமன்றக் கட்டளைகள்	26	0	0	26
விஷேட மேன்முறையீடுகள்	02	0	0	02

அவதானிப்புக்கள்

1. 2024 ஆம் ஆண்டில் தாக்கல் செய்த 26 விஷேட தீர்மான வழக்குகள் 2025.09.30 ஆம் திகதியில் நிலுவையிலுள்ளன. ஏனெனில், 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும் அவை வெற்றும் வரிதான வழக்குகளாகவே கருதப்படும். எனவே, புள்ளி விபரங்கள் பூச்சியம் (0) என திருத்தப்பட வேண்டும்.
2. இங்கு விஷேட மேன்முறையீடுகளாக காட்டப்பட்டுள்ள வழக்குகள் உயர் நீதிமன்ற சட்ட விதி வழக்குகளாக மாற்றப்பட்டுள்ளன.
   - SC Special 01/2021 to Sc Rule 06/2022
   - SC Special 03/2021 to SC Rule 04/2022

- SC Special 02/2021 எனும் இலக்க வழக்கானது SC Rule 06/2022 எனும் இலக்க வழக்குடன் இணைக்கப்பட்டுள்ளது. இது நிலுவையிலுள்ள ஒரு வழக்காகும்.

ஆகவே, மேலே குறிப்பிட்டுள்ள புள்ளி விபரங்களை கீழுள்ளவாறு திருத்த வேண்டும்.

வழக்குகளின் தன்மை	2025/01/01 ஆந் திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை	2025/01/01 முதல் 2025/12/31 வரை தாக்கல் செய்த வழக்குகளின் எண்ணிக்கை	2025/01/01 முதல் 2025/12/31 ஆந் திகதிக்கு தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2025/12/31 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதியாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை
பாராளுமன்ற சட்ட மூலங்கள் தொடர்பான உயர் நீதிமன்றக் கட்டளைகள்	0	0	0	0
விஷேட மேன்முறையீடுகள்	01	0	0	01

2.b மேன்முறையீட்டு நீதிமன்றம்

மேன்முறையீட்டு நீதிமன்றம் 3 பதிவறைகளை நிர்வகிக்கின்றது. அங்கு விசாரிக்க வேண்டியுள்ள மற்றும் விசாரணைகள் முடிவடைந்துள்ள வழக்கு வகைகள் உள்ளடங்கிய பெரியதொரு தரவுத்தளம் உள்ளது.அப்பதிவறைகளில் புதியதொரு முறைமைக்கேற்ப வழக்கு அறிக்கைகளை களஞ்சியப்படுத்தவும் வழக்கிலங்களை அடையாளக் குறியிடவும் (Barcode) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அவ்விதத்தில் ஒவ்வொரு வழக்கு வகைக்கேற்ப வழக்குகளை களஞ்சியப்படுத்தி தேவைப்படும் போது அவற்றை பரீட்சிக்க இலகுவானதொரு முறை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது வரிக்குறியீட்டு இலக்கமிடல் முறை மூலம் வழக்கு முகாமைத்துவ முறைமையுடன் (Case Management system) தொடர்புபடுகின்றது.

வழக்குக் கட்டணம், பிரதிபண்ணற் கட்டணம் போன்ற நிர்வாக ரீதியான கட்டணங்களை அறவிடும் போது கணிணிமயப்படுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்களை வழங்கும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, உரிய கணக்கறிக்கைகளை கணிணி முறைமையைப் பயன்படுத்தி தன்னியக்க உருவாக்கம் மூலம் தயார்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பட்டியலிடல் பிரிவு வழக்கு முகாமைத்துவ முறைமை மூலம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப, மிகச்சரியாகவும் வினைத்திறனுடனும் வழக்குகளைப் பட்டியலிடுதல், வலைத்தளத்தை நிர்வகித்தல், வழக்காடிகளின் அறிவுறுத்தலுக்காக கூப்பிடும் வழக்குகள் தொடர்பான விபரங்களை நாளாந்தம் இற்றைப்படுத்தி காட்சிப்படுத்ததுல் ஆகிய பணிகள் இடம்பெறுகின்றன.

பட்டியலிடும் பிரிவும், பதிவாளர் மற்றும் பிரதிப் பதிவாளர்களும் அனைத்து பதிவறைகளுடன் வழக்கு முகாமைத்துவ முறைமையின் மூலம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர். அதனூடாக, உரிய உத்தியோகத்தருக்கு ஏதேனும் ஒரு வழக்கறிக்கையின் விபரத்தை பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. இதனை சட்டத்தரணிகள் மற்றும் வழக்காடிகள் பரிசீலிக்கும் விதத்தில் வியாபிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மிகவும் வினைதிறன்மிக்க பயனுறுதிவாய்ந்த மக்கள் சேவையை உறுதிப்படுத்துவதற்காக மேன்முறையீட்டின் வழக்குக்கோவைகளை இலத்திரனியல் வடிவமைப்பு(e-format)க்கு மாற்றுவதற்கும் இலத்திரனியல் ஆவணப்படுத்தல் முறை மூலம் அதனை நிர்வகிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தை நவீனமயப்படுத்தி கையடக்கத் தொலைபேசிச் செயலியை (Mobile Application) அறிமுகப்படுத்தி வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களை செயல்திறனுடன் காட்சிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேன்முறையீட்டு அலுவலகம், நீதிபதிகள் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் திறந்த நீதிமன்றங்கள் ஆகிய அனைத்தையும் கணிணி வலைப்பின்னலுக்குள் உட்படுத்தி கடதாசி ஆவணங்களின் சுற்றோட்டத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின்
2025.01.01 முதல் 2025.12.31 வரையிலான செயலாற்றுகை

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் 2025.01.01 முதல் 2025.12.31 வரையிலான செயலாற்றுகை						
	வழக்கு வகை	**2025/01/01 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய வழக்குகளின் எண்ணிக்கை**	**2025/01/01 முதல் 2025/12/31 வரை பதிவாகிய வழக்குகளின் எண்ணிக்கை**	**2025.12.31 ஆம் திகதிக்கு தீர்க்கப்பட வேண்டியுள்ள வழக்குகளின் மொத்தம்**	**2025/01/01 முதல் 2025/12/31 வரை தீர்க்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை**	**2025/01/01 திகதிக்கு தீர்க்கப்பட வேண்டிய மீதியாகவுள்ள வழக்குகளின் எண்ணிக்கை**
01	எழுத்தாணை விண்ணப்பங்கள்	1891	1286	3177	1160	2017
02	மேல் நீதிமன்ற – குற்றவியல் வழக்குகள்	621	251	872	291	581
03	கடலாண்மை வழக்குகள்	3	5	8	3	5
04	பிறநாட்டிடம் ஒப்படைத்தல்	-	-	-	-	-
05	மாகாண மேல் நீதிமன்ற மேன்முறையீடு	882	263	1145	209	936
06	சிவில் மேன்முறையீடுகள்	3	0	3	3	0
07	மேல் நீதிமன்ற மீள்நோக்கு விண்ணப்பங்கள்	167	117	284	149	135
08	மீளாய்வு வழக்குகள்	13	7	20	9	11
09	மேன்முறையீட்டுக்கான அனுமதி	45	18	63	47	16
10	வரி மேன்முறையீடுகள்	559	208	767	22	745
11	மேல் நீதிமன்ற பிணை மேன்முறையீட்டு விண்ணப்பங்கள்	-	-	-	-	-
12	பிணை விண்ணப்பங்கள்	424	539	963	575	388
13	வக்பு சபையின் மேன்முறையீடு	2	3	5	1	4
14	காணி மீளாய்வுச் சபையின் மேன்முறையீடுகள்	5	2	7	-	7
15	Restitution in Intergrum	151	76	227	141	86
16	நீதிமன்றத்தை அவமதித்தல் வழக்குகள்	68	40	108	45	63
17	நீதிமன்றத்தை மாற்றுதல் தொடர்பான வழக்குகள்	19	26	45	40	5
18	ஆட்கொணர் வழக்குகள்	4	1	5	5	0
19	தகவல் அறியும் சட்டம்	27	3	30	5	25
20	தடைக் கட்டளைகள்	6	6	12	8	4

21	நீதிவான் நீதிமன்ற மீளாய்வுகள்	5	6	11	10	1
22	நானாவித வழக்குகள்	6	6	12	3	9
23	நாடு கடத்தல் வழக்குகள்	-	-	-	-	-
	மொத்தம்	**4901**	**2863**	**7764**	**2726**	**5038**

அத்தியாயம் 03 – வருடத்துக்கான நிதிச் செயலாற்றுகை

3.1 அரச நிறுவனங்களுக்கான கணக்கீட்டுத் தரநியமம் இல. 01 இன் மூலம் குறித்துரைத்துள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப தயார்செய்துள்ள நிதிக்கூற்று.

3.2 ஒதுக்கப்பட்ட நிதிப் பயன்பாட்டின் செயலாற்றுகை.

3.3 நன்கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை.

நன்கொடைகள் அல்லது ஏனைய வரவுகள் இல்லை

3.4 நிதி அல்லாத சொத்துக்களின் செயலாற்றுகை

நிதி அல்லாத சொத்துக்கள் இல்லை.

3.5 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

3.1 அரச நிறுவனங்களுக்கான கணக்கீட்டுத் தரநியமம் இல. 01 இன் மூலம் குறித்துரைத்துள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப தயார்செய்துள்ள நிதிக்கூற்று.

ஏசீஏ- எப்

2025 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025		குறிப்பு	உண்மை நிலை 2025	உண்மை நிலை 2024	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	ஏசீஏ-1
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	ஏசீஏ-1
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		504,640,000	411,416,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		-	-	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		890,985	298,485	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**505,530,985**	411,714,485	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**505,530,985**	411,714,485	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		**895,657**	3,898,672	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**504,635,328**	407,815,813	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
374,500,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	353,344,138	277,553,898	ஏசீஏ-2(ii)
176,400,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	136,754,822	119,676,115	ஏசீஏ-2(ii)
100,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	14,202	5,313	ஏசீஏ-2(ii)
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	ஏசீஏ-2(ii)
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	ஏசீஏ-2(ii)
551,000,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**490,113,162**	397,235,326	
	மூலதனம் செலவினம்				
5,500,000	மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும்	10	5,455,814	1,983,100	ஏசீஏ-2(ii)
15,000,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	13,795,948	11,397,864	ஏசீஏ-2(ii)
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	ஏசீஏ-2(ii)
10,000,000	திறன் விருத்தி	14	2,819,615	3,698,599	ஏசீஏ-2(ii)
-	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	-	-	ஏசீஏ-2(ii)
30,500,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**22,071,377**	17,079,563	
	வைப்புக் கொடுப்பனவுகள்		-	-	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		1,282,759	500,000	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**1,282,759**	500,000	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		513,467,298	414,814,889	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(8,831,970)	(6,999,076)	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		8,831,970	6,999,076	ஏசீஏ-7
-	**டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி**		-	-	ஏசீஏ-3

A.A.W.C. ATHAUDA
Chief Accountant
Supreme Court
Colombo - 12.

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2025 ரூபா	2024 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	637,628,140	623,832,191
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	1,819,822	1,428,048
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**639,447,962**	**625,260,239**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		1,819,822	1,428,048
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		637,628,140	623,832,191
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	-	-
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**639,447,962**	**625,260,239**

பக்க இலக்கம் ...8... முதல் ...23... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் .24. முதல் .30. வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 **ஆம் ஆண்டின் 17.12.2025 திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 38(1) (இ) இன் படி நிதி நிருவாகத் திற்காக வினைத்திறன்மிக்க உள் ளக நிருவாகத் தொகுதியொன்று அறி க்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத் திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற் பார்வை செய் வதற்கும் அதற்கு அமைவாக அந் தத் தொகுதியை வினைத் திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற் றங்களை மேற் கொள்வதற்கும் அடிக்கடி மீளாய் வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

....	....	....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி : 2026.02.25	திகதி : 2026.02.25	திகதி : 2026.02.25

MANODHI HEWAWASAM
Registrar of the Supreme Court/
Judge of the Sri Lanka Judicial Service

MANODHI HEWAWASAM
Registrar of the Supreme Court/
Judge of the Sri Lanka Judicial Service

Supreme Court
Colombo - 12.

2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2025 ரூபா	2024 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	9,050,428	6,999,076
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	504,640,000	411,416,000
முற்பணங்களை அறவிடல்	903,344	298,485
வைப்புக்களின் பெறுகை	-	-
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**514,593,772**	**418,713,561**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள்	490,098,960	397,230,013
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	14,202	5,313
மூலதனச் சொத்துகளின் புனரமைப்புஇ மூலதன மாற்றங்கள்இ திறன் வளர்ப்பு மற்றும் பிற மூலதனச் செலவினங்கள்	8,275,429	5,681,699
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	230,817	-
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	895,657	3,898,672
முற்பணக் கொடுப்பனவு	1,282,759	500,000
வைப்புக் கொடுப்பனவு	-	-
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**500,797,824**	**407,315,697**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**13,795,948**	**11,397,864**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு;		
மூலதனச் சொத்துகளின் நிர்மாணம்இ கொள்முதல் மற்றும் இதர முதலீட்டு பெறுதல்கள்	13,795,948	11,397,864
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**13,795,948**	**11,397,864**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(13,795,948)**	**(11,397,864)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு;		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

A.A.W.C. ATHAUDA
Chief Accountant
Supreme Court

3.2 ஒதுக்கப்பட்ட நிதியை (இருப்பின்) பயன்படுத்திக்கொள்ளும் செயலாற்றுகை

(ரூபாய். 000)

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கப்பட்ட நிதி		உண்மை செலவு	இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல்	இறுதி		
உயர் நீதிமன்றம்				
மீண்டெழும்	254,500	259,000	223,739	86%
மூலதனம்	14,500	14,500	10,145	70%
மேன்முறையீட்டு நீதிமன்றம்				
மீண்டெழும்	292,000	292,000	266,374	91%
மூலதனம்	16,000	16,000	11,927	75%
மொத்த ஒதுக்கீடு				
மீண்டெழும்	546,500	551,000	490,113	89%
மூலதனம்	30,500	30,500	22,072	72%

3.3 நன்கொடைகள் மற்றும் ஏனைய வரவுகள் தொடர்பான செயலாற்றுகை.

- ஒன்றுமில்லை -

3.4 நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கையிடல் செயலாற்றுகை

(ரூபாய். 000)

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2025 ஆந் திகதிக்கு பொருட் கணிப்பீட்டு அறிக்கைக்கேற்ப மீதி	31.12.2025 ஆந் திகதிக்கு நிதி நிலைமை அறிக்கையின் படி மீதி	எதிர்காலத்தில் கணக்கீட்டுக்கு உட்பட வேண்டியது	முன்னேற்றத்தை % ஆக அறிக்கையிடல்.
9152	இயந்திரம்	637,628	637,628	-	100%

3.5 கணக்காய்வாளரின் அறிக்கை

தேசிய கணக்காய்வு அலுவலகம்

My No} JLO/B/SC/FA/2025/06 திகதி :- 2026 மே 29

பதிவாளர் (கணக்கீட்டு உத்தியோகத்தர்)

மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள்

செலவினத் தலைப்பு 004 : 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 11(1) நியதிகளுக்கேற்ப, மீயுயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் மீதான 2025 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்றுக்களின் சாராம்ச அறிக்கை.

குறித்த அறிக்கையும் நிதிக் கூற்றுப் பிரதிகளும் (சிங்களம், ஆங்கிலம், தமிழ்) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

ஒப்பம்
கே.கே.எஸ் ஜயகொடி
பிரதிக் கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளருக்காக

பிரதிகள் : பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம்.

3.5 கணக்காய்வாளரின் அறிக்கை

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல: JLO/B/SC/FA/2025/06 திகதி 2026 மே 29

பதிவாளர்

மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள்

தலைப்பு 004- 2025 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் கீழ் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையின் சுருக்கம்.

மேற்குறிப்பிடப்பட்ட அறிக்கையானது, சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளிலான மூல நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஒப்பமிடப்பட்டுள்ளது

கே.கே.எஸ். ஜெயகொடி

பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

பிரதி : பணிப்பாளர் நாயகம், பொதுக் கணக்குகள் திணைக்களம்

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல: JLO/B/SC/FA/2025/06 திகதி 2026 மே 29

பதிவாளர்

மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள்

<u>தலைப்பு 004- 2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் கீழ் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையின் சுருக்கம்.</u>

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 தகைமையுடைய அபிப்பிராயம்

தலைப்பு 004- 2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறான நிதி நிலைமை, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கை மற்றும் காசுப் பாய்ச்சல் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய, 2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் நிதி அறிக்கைகள், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் எனது வழிகாட்டலின் படி கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் உயர் நீதிமன்றநீதிபதிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராய வெளிப்பாடுகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை, உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள செல்வாக்கினைத் தவிர, ஏனைய விடயங்களில், இந்த நிதி அறிக்கையானது 2025 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் நிதி நிலைமை, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் நெறிமுறைகளுக்கு இணங்க, உண்மையானதும் நியாயமானதுமான நிலையைப் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 தகைமையுடைய அபிப்பிராயத்திற்கான அடிப்படை

மேலே 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது தகைமையுடைய அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வுத் தரநிலைகளுக்கு (S.L.A.S) இணங்க நான் இக்கணக்காய்வை மேற்கொண்டேன். நிதி அறிக்கைகள் தொடர்பில் இக்கணக்காய்வுத் தரநிலைகளின் கீழ் எனக்குள்ள பொறுப்புகள், கணக்காய்வாளரின் பொறுப்புகள் எனும் பிரிவின் கீழ் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையை அமைப்பதற்கு, என்னால் பெறப்பட்ட சான்றுகள் போதுமானதும் பொருத்தமானதுமாகும் என நான் நம்புகின்றேன்.

1.3 விடய முக்கியத்துவம் - நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான அடிப்படை

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான அடிப்படையை விளக்கும் அதன் 1 ஆம் குறிப்பிற்கு நான் கவனத்தை ஈர்க்கின்றேன். இந்த நிதி அறிக்கைகள், நிதிப் பிரமாணங்கள் 150 மற்றும் 151 ஆகியவற்றுக்கும், 2025 டிசம்பர் 17 ஆம் திகதியிட்ட 02/2025 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டுதலுக்கும் இணங்க, மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள், பொது திறைசேரி மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காகவே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, இவை வேறு எந்தவொரு நோக்கத்திற்கும் பொருத்தமற்றதாக இருக்கலாம். இவ்வறிக்கையானது உயர் நீதிமன்ற நீதிபதிகள், பொது திறைசேரி மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மட்டுமே உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

நிதிப் பிரமாணங்கள் 150 மற்றும் 151 ஆகியவற்றுக்கும், 2025 டிசம்பர் 17 ஆந் திகதிய 02/2025 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டுதலுக்கும் இணங்க, உண்மையானதும் நியாயமானதுமான நிலையைப் பிரதிபலிக்கும் நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும், மோசடி அல்லது தவறுகளினால் ஏற்படும் பிழையான கூற்றுக்கள் அற்றதாக அவை இருப்பதை உறுதிசெய்வதற்கும் பொருத்தமான உள்ளக கட்டுப்பாடுகளை நிறுவுவது பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

மேலும், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளவாறு, மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள் தொடர்பான நிதிக் கூற்றுக்களை உரிய காலத்தில் தயாரிப்பதற்கு வசதியாக வருமானம், செலவினம் மற்றும் பொறுப்புக்கள் குறித்த கணக்குப் புத்தகங்களும் பதிவுகளும் பேணப்பட வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1) (இ) ஆம் உப பிரிவின் பிரகாரம், மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளின் நிதிப் கட்டுப்பாட்டிற்காக ஒரு செயற்திறன்மிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமை பேணப்படுவதைக் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டும் என்பதுடன், இம்முறைமையின் செயற்திறனை அவ்வப்போது மீளாய்வு செய்து, இம்முறைமை திறம்பட இயங்குவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வது தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக, மோசடி அல்லது பிழையான காரணங்களினால் நிதி அறிக்கைகளில் கணிசமான தவறான கூற்றுக்கள் பெறவில்லை என்பதற்கான ஒரு உறுதியை வழங்குவதும், எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வு அறிக்கையொன்றை வெளியிடுவதுமே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் என்பது ஒரு உயர்தர சான்றளிப்பாகும், ஆனால் இலங்கை கணக்காய்வுத் தரநிலைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வானது, எப்போதும் தவறான கூற்றுக்களை வெளிப்படுத்தும் ஒரு உறுதிப்படுத்தலாக அமையாது. தனிப்பட்ட அல்லது கூட்டுச் செல்வாக்கின் காரணமாக ஏற்படும் மோசடிகள் மற்றும் தவறுகள் என்பன தவறான கூற்றுக்களாக இருக்கலாம், மேலும் இவற்றின் கணிசமான தன்மையானது, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனர்களால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

இலங்கை கணக்காய்வுத் தரநிலைகளின்படி, கணக்காய்வின் ஒரு பகுதியாக நான் தொழில்முறைசார் நீதித்தன்மையுடனும் தொழில்முறைசார் சந்தேகக் கண்ணோட்டத்துடனும் செயற்பட்டேன். மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் கணிசமான தவறான கூற்றுக்கள் ஏற்படுவதற்கான அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிடுவதற்கும், எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான ஓர் அடிப்படையைத் தயாரிப்பதற்கும் ஏதுவான வகையில், சூழ்நிலைக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிட்டு அவற்றைச் செயற்படுத்தினேன். கூட்டுச் சதி, போலி ஆவணங்களைத் தயாரித்தல், திட்டமிட்டுத் தவிர்த்தல் மற்றும் தவறான பிரதிநிதித்துவப்படுத்தல் போன்ற காரணங்களால் மோசடிகள் மறைக்கப்படுவதனால், ஒரு சாதாரண பிழையினால் ஏற்படும் தவறான கூற்றின் தாக்கத்தை விட மோசடியினால் ஏற்படும் தாக்கம் மிகவும் சக்திவாய்ந்ததாகும்.

- உள்ளக நிர்வாகத்தின் செயற்திறன் குறித்து ஒரு அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் நோக்கம் இல்லாதபோதிலும், சூழ்நிலைக்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக, உள்ளக நிர்வாகம் குறித்த ஒரு புரிதல் பெறப்பட்டது.

- நிதி அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாக அமைந்த பரிவர்த்தனைகள் மற்றும் சம்பவங்கள், நிதி அறிக்கைகளில் பொருத்தமான முறையிலும் நியாயமான முறையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளமை மதிப்பிடப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக, நிதி அறிக்கைகளின் கட்டமைப்பு மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாக அமைந்த பரிவர்த்தனைகள் மற்றும் சம்பவங்களின் உள்ளடக்கம் குறித்து ஒட்டுமொத்த மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது நான் கண்டறிந்த முக்கிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிர்வாகக் குறைபாடுகள் மற்றும் பிற விடயங்கள் குறித்து கணக்கீட்டு உத்தியோகத்தரின் கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.

1.6. நிதி அறிக்கைகள் மீதான அபிப்பிராய வெளிப்பாடு

1.6.1 நிதிசாராச் சொத்துக்கள்

(அ). மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் நீதிபதிகளின் நூலகத்திற்காக ரூபா 2,785,415 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள், நிதிக்கூற்றுக்களில் நிதிசாராச் சொத்துக்களாக பதியப்பட்டிருக்கவில்லை. மேலும், இப்புத்தகங்கள் திறைசேரி அச்சுப்படிவம் 82 இலும் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ). மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்டு, வருகைப்பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா. 22,690 பெறுமதியான புத்தகங்கள், நிதிசாராச் சொத்துக்களின் கீழ் மதிப்பிடப்பட்டு பதியப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, அவை நிதிக்கூற்றுக்களில் கணக்கில் காட்டப்படவில்லை.

2. ஏனைய சட்டத் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (ஐ) (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் பிரகடனப்படுத்துகின்றேன்.

(அ) நிதி அறிக்கைகள் கடந்த ஆண்டுடன் ஒத்ததாகக் காணப்படுகின்றன.

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

3. நிதிசார் மதிப்பாய்வு

3.1. செலவின முகாமைத்துவம்

(அ).வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் யதார்த்தமான அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, 06 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் ஒரு மூலதனச் செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்தம் ரூபா 86,400,000 ஒதுக்கீட்டில் ரூபா 40,560,652 சேமிப்பாக எஞ்சியுள்ளது. பயன்படுத்தப்படாத இந்த மீதித் தொகையானது அந்தந்த ஒதுக்கீடுகளில் 34 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான வரம்பில் காணப்பட்டது.

(ஆ). திருத்தப்பட்ட சம்பளங்களை வழங்குவதற்காக குறை நிரப்பீடு மதிப்பீட்டின் மூலம் 45 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட போதிலும், அந்த முழு ஒதுக்கீடும் பயன்படுத்தப்படாமல் எஞ்சியுள்ளது.

3.2 கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றுப்படுத்துதல்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்கீட்டு உத்தியோகத்தர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயம் குறித்து சான்றுப்படுத்த வேண்டும் என்ற போதிலும், அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

உள்ளக கணக்காய்வுச் செயற்பாட்டை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வினைத்திறன் மிக்க முறைமை இருப்பதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு இருந்தபோதிலும், இவ்வறிக்கையின் 5.1 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு, அந்தத் தேவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் குறிப்பு	**இணங்காமை**
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்	
(I) நிதிப் பிரமாணம் 110	இழப்பீட்டுப் பதிவேடு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அது இற்றைப்படுத்தப்பட்டும் இருக்கவில்லை.
(ii) நிதிப் பிரமாணம்1645 (அ)	நிறுவனத்தினால் வாகனப் பயணப் பதிவேடுகள் பேணப்பட்டு வந்த போதிலும், 22 வாகனங்களுக்குரிய வாகன விபரங்கள், எரிபொருள் நுகர்வு விபரங்கள், வருடாந்த அனுமதிப்பத்திர விபரங்கள், விபத்து பதிவுகள் மற்றும் மாதாந்த பயணச் சுருக்கங்கள் உள்ளிட்ட முக்கிய விபரங்கள் முறையாகப் பதிவு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 நிர்வாகக் குறைபாடுகள்

தலைப்பு 004 மற்றும் தலைப்பு 234 ஆகியவற்றிற்குச் சொந்தமான ரூபா 139,840,095 பெறுமதியான சொத்துக்கள், ஒரு பொருத்தமான நடைமுறை இல்லாத காரணத்தினால் முறையாகக் கண்டறியப்பட்டு வேறாகப் பிரிக்கப்பட்டிருக்கவில்லை.

5. நல்லாட்சி

5.1 உள்ளக கணக்காய்வு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம், உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நிறுவனத்தின் ஆளும் குழுவின் மூலம் திணைக்களம் தனக்கென ஓர் உள்ளக கணக்காய்வாளரை நியமிக்க வேண்டியிருந்தது. மேலும், 2019 ஜனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் பிரகாரம், அனைத்து விசேட செலவின அலகுகளுக்கும் பிரதம கணக்கீட்டு அலுவலகர் அல்லது கணக்கீட்டு அலுவலகரின் நேரடி மேற்பார்வையின் கீழ், இலங்கை கணக்காளர் சேவையின் தகுதியான உத்தியோகத்தர் ஒருவரைத் தலைவராகக் கொண்ட ஓர் உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், மீளாய்வுக்கு உட்பட்ட இந்த நிதி ஆண்டின் இறுதி வரை ”மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள்” என்ற செலவினத் தலைப்பின் கீழ் அவ்வாறானதொரு உள்ளக கணக்காய்வுப் பிரிவு நிறுவப்பட்டிருக்கவில்லை.

5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவிற்கும், 2025 ஏப்ரல் 28 ஆந் திகதிய DMA/01/2025 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.2 ஆம் பந்திக்கும் இணங்க, அதன் பணிகளைச் செய்வதற்குத் துணையாகக் கணக்கீட்டு அலுவலகர் அல்லது சம்பந்தப்பட்ட ஆளும் குழுவினால் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட வேண்டும். வருடாந்தம் காலாண்டு அடிப்படையில் குறைந்தது நான்கு (04) குழுக்கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்ற போதிலும், மீளாய்வுக்கு உட்பட்ட இந்த நிதி ஆண்டின் இறுதி வரை "மீயுயர் நீதிமன்ற நீதிபதிகள்" என்ற செலவினத் தலைப்பின் கீழ் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பமிடப்பட்டுள்ளது

கே.கே.எஸ். ஜெயகொடி

பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (அமுலாக்கல் திட்டத்தின் அடிப்படையில்)

பொருத்தமற்றது.

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை

5.1 இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை குறிப்பிடவும்

பொருத்தமற்றது

அத்தியாயம் - 06 - மனிதவள முகாமைத்துவ விபரம்

6.1 பதவியணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட பதவியணி	**தற்போதுள்ள பதவியணி**	**பதவி வெற்றிடம் (மிகை)**
சிரேஷ்ட			
உயர் நீதிமன்றம்	17	15	02
மேன்முறையீட்டு நீதிமன்றம்	20	18	02

6.2 ** மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றதென சுருக்கமாக குறிப்பிடவும்.

பொருத்தமற்றது.

6.3 மனித வள விருத்தி

பொருத்தமற்றது.

அத்தியாயம் - 07 இணக்கப்பாட்டு அறிக்கை

	ஏற்புடைய தேவைப்பாடு	**இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)**	**இணக்கமற்றதெனின் அதனை சுருக்கமாக விபரிக்குக**	**எதிர்காலத்தில் இணக்கமற்றதை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை.**
1	கீழே குறிப்பிடுகின்ற நிதிக்கூற்றுகள்/கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
1.1	வருடாந்த நிதி அறிக்கை.	இணக்கமானது		
1.2	வேறு			பொருத்தமற்றது
2	புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பேணல் (நி.பி. 445)			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்து பேணிவரல்.	இணக்கமானது.		
2.2	தனிநபர் வேதனாதி பதிவுகள்/ தனிநபர் வேதனாதி அட்டைகளை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கையை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்	இணக்கமானது.		
2.7	பொருட் பதிவேட்டினை இற்றைப்படுத்தி பேணிவரல்	இணக்கமானது.		
2.8	இருப்புப் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.9	இழப்பு பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.10	பொறுப்பு பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GAN20) பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவரல்.	இணக்கமானது.		

03	**நிதிக்கட்டுப்பாட்டு செயற்பாடுகளுக்காக அதிகாரமளித்தல். (நி.பி 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்துக்குள் பகிரப்பட்டுள்ளன.	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்களை அதிகாரமளிப்பது தொடர்பாக நிறுவனத்துக்குள் அறிவுறுத்துதல்.	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களால் அங்கீகரிக்கும் விதத்தில் அதிகாரமளித்தல்.	இணக்கமானது		
3.4	171/2004 ஆம் இலக்க 2014.05.11 ஆந் திகதிய அரச கணக்கீட்டு சுற்றுநிருபத்துக்கேற்ப அரச சம்பளப் பட்டியல் மென்பொருள் பொதி பயன்பாட்டின் போது கட்டுப்பாடுகள் கணக்காளர்களினால் கடைபிடிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தை தயாரித்தல்.**			
4.1	வருடாந்த செயல்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டத்தை தயாரித்தல்.	இணக்கமானது		
4.3	மீளாய்வுக்கு உட்படுத்துகின்ற வருடத்துக்கு 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் வரவு செலவுத்திட்ட அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொளள்ளல்.			பொருத்தமற்றது
4.4	வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல்.	இணக்கமானது		
4.5	வருடாந்த மதிப்பீட்டைத் தயார்செய்து தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்துக்கு உரிய திகதிக்கே முன்வைத்தல்.	இணக்கமானது		

4.6	வருடாந்த நிதிப்பாய்ச்சல் கூற்றை திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்.			
4.7	காலாண்டு அறிக்கைகளை உரிய திகதிக்கே திறைசேரிக்கு சமர்ப்பித்தல்.			
5.	**கணக்காய்வு வினாக்கள்**			
5.1	கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் விதந்துரைத்துள்ள திகதியில் அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் பதில் வழங்கபட்டுள்ளது.	இணக்கமானது		
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி. பி 134(2) DMA/1-2019 க்கு இணங்க வருடத்தின் ஆரம்பத்திலேயே கணக்காய்வாளர் நயாகத்துடன் கலந்துரையாடிதன் பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயார்செய்தல்.			பொருத்தமற்றது
6.2	சகல கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலத்தினுள் பதிலளித்தல்.			பொருத்தமற்றது
6.3	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப உறுப்புரையின் படி அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துக்கு சமர்ப்பித்தல்.			பொருத்தமற்றது
6.4	நி.பி 134(3) இன் படி, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.			பொருத்தமற்றது
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA 1-2019 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கு இணங்க குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை			பொருத்தமற்றது

	குறித்த வருடத்தினுள் நடாத்தியிருத்தல்.			
8	**ஆதன முகமைத்துவம்**			
8.1	01/2017 ஆம் இலக்க ஆதன முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 07 வது அத்தியாயத்துக்கு அமைவாக ஆதனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் விற்றுத் தீர்த்தல் தொடர்பான தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
8.2	மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் 13 ஆவது உறுப்புரைக்கு அமைவாக அச்சுற்றுநிருபத்தின் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தவும் இணைப்புச் செய்வதற்கும் பொருத்தமான ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு அவர் தொடர்பான தகவல்களை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்துக்கு அறிக்கைப்படுத்தியிருத்தல்.	இணக்கமானது		
8.3	05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபத்துக்கு அமைவாக பொருட்கள் கணக்கெடுப்பை நடாத்தி குறித்த அறிக்கையை குறித்த திகதிக்கு கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை.	இணக்கமானது		
8.4	வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் குறிப்பிடப்பட்ட மேலதிகம், பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகளை சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் நிறைவேற்றியிருத்தல்.	இணக்கமானது		

8.5	நி.பி 772 க்கேற்ப பாவனைக்குதவாத பொருட்களை அகற்றியிருத்தல்.	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்.**			
9.1	ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளை தயாரித்து குறித்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்தல்.			பொருத்தமற்றது. ஒதுக்க வாகனங்கள் இல்லை.
9.2	வாகனமொன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு ஆறு மாதத்துக்கும் குறைவான காலத்தினுள் விற்றொழித்திருத்தல்.	இணக்கமானது		
9.3	வாகன லொக் குறிப்பு புத்தகம் இற்றைப்படுத்தி பேணுதல்.			பொருத்தமற்றது. ஒதுக்க வாகனங்கள் இல்லை.
9.4	அனைத்து வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.பி 103, 104, 109 மற்றும் 110 க்கேற்ப செயற்படுதல்.	இணக்கமானது		
9.5	2016/30 ஆம் இலக்க 2016.12.29 ஆந் திகதியுடைய பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் 3.1 உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கேற்க வாகனங்களின எரிபொருட் பாவனையை பரிசீலனை செய்தல்.			பொருத்தமற்றது. ஒதுக்க வாகனங்கள் இல்லை.
9.6	குத்தகை காலத்தின் பின்னர் குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகங்களை முழுமையாக மாற்றுதல்.			பொருத்தமற்றது. ஒதுக்க வாகனங்கள் இல்லை.
10	**வங்கிக் கணக்கு முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதியில் வங்கிக்கணக்கிணக்கக் கூற்றை தயார்செய்து சான்றுபடுத்தி அவற்றை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணக்கமானது		

10.2	மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட வருடத்திலோ அல்லது அதற்கு முன்னருள்ள வருடங்களிலிருந்து முன்கொணரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகளை தீர்த்துவைத்தல்.			பொருத்தமற்றது
10.3	வங்கிக்கணக்கிணக்க கூற்றுக்களிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட மற்றும் சரிசெய்ய வேண்டிய நிலுவைகள் தொடர்பாக நிதி விதிமுறைகளுக்கேற்ப செயற்பட்டு ஒரு மாத காலத்தினுள் அந்நிலுவையை தீர்த்தல்.	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்**			
11.1	ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் வரையறைகளை மீறாது செலவுகளை மேற்கொள்ளல்.	இணக்கமானது		
11.2	நி. பி 94(1) இற்கேற்ப ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளிலிருந்து செலவு செய்ததன் பின்னர் வருட இறுதியில் நிலுவையிலுள்ள நிதி ஒதுக்கீடுகளின் வரையறையை மீறாத பொறுப்புக்கள்.	இணக்கமானது		
12.	**அரச உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்.	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவைகள் தொடர்பாக கால பகுப்பாய்வினை நடத்தியிருத்தல்.	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலதிகமான கடன் நிலுவைகளை தீர்ப்பனவு செய்தல்.	இணக்கமானது.		
13.	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுதல் தொடர்பாக நி.பி 571 க்கு இணங்க நடவடிக்கை எடுத்திருத்தல்.			பொருத்தமற்றது

13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை இற்றைப்படுத்தி பேணிவரல்.			பொருத்தமற்றது
14	**பணி முற்பணக்கணக்கு**			
14.1	மீளாய்வு வருடத்தின் இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியானது திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருத்தல்.	இணக்கமானது		
14.2	நி.பி 371 க்கேற்ப வழங்கப்பட்ட தேவை நிமித்த உப-பணி முற்பணமானது குறித்த செயற்பாடு முடிவடைந்து ஒரு மாதகாலத்தினுள் தீர்க்கப்பட்டது.	இணக்கமானது		
14.3	நி.பி 371 க்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சாதவாறு தேவை நிமித்த பணி முற்பணம் வழங்கபட்டிருத்தல்.	இணக்கமானது		
14.4	பணி முற்பண கணக்கின் மீதியை திறைசேரியின் புத்தகத்துடன் மாதாந்தம் ஒப்புநோக்கல்.	இணக்கமானது.		
15	**வருமானக் கணக்கு**			
15.1	உரிய விதிமுறைகளுக்கு அமைவாக திரட்டப்பட்ட வருமானங்களிலிருந்து மீளசெலுத்தப்பட வேண்டியவை செலுத்தப்பட்டன.			பொருத்தமற்றது.
15.2	திரட்டியிருந்த வருமானத்தை வைப்புக் கணக்கில் வரவு வைக்காது நேரடியாக வருமானத்துக்கு வரவு வைத்தல்.			பொருத்தமற்றது.
15.3	நிபி. 176 க்கு அமைவாக வருமான நிலுவை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.			பொருத்தமற்றது.
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி எல்லைக்குள் ஆளணியை நிர்வகித்தல்.	பொருத்தமானது		

16.2	அனைத்து ஆளணி அங்கத்தவர்களுக்கும் எழுத்து மூலமான கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருத்தல்.	பொருத்தமானது		
16.3	20.09.2017 ஆந் திகதியுடைய 04/2017 ஆம் இலக்க சுற்றுநிருபத்துக்கமைவாக அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	பொருத்தமானது		
17	**பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்.**			
17.1	தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு சிறந்த தகவல் பதிவேடு நிர்வகிக்கப்படுவதுடன் அது தகவலறியும் உரிமை மற்றும் விதிமுறைகளுக்கிணங்க இற்றைப்படுத்தப்படுகின்றது.	இணக்கமானது.		
17.2	நிறுவனம் தொடர்பான தகவல்கள் அதன் வலைத்தளத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதுடன் வலைத்தளத்தினூடாகவோ அல்லது மாற்று வழிகளினூடாகவோ நிறுவனம் தொடர்பான மக்களின் பாராட்டுக்கள்/ குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கான வசதிகளை மேற்கொண்டிருத்தல்.	இணக்கமானது.		
17.3	தகவலறியும் சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் உறுப்புரைகளுக்கு அமைவாக வருடத்துக்கு இருமுறை அல்லது வருடத்துக்கு ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தில்.	இணக்கமானது.		
18	**பிரசைகள் சாசனத்தை அமுல்படுத்துதல்.**			

18.1	பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 05/2008 மற்றும் 05/2008 (1) ஆம் இலக்கங்களுடைய சுற்றுநிருபங்களுக்கமைவாக நிறுவனத்தினால் பிரசைகள் சாசனம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனம் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது.	இணக்கமானது.		
18.2	சுற்றுநிருபத்தின் 2.3 பந்திக்கு அமைவாக பிரசைகள் சாசனம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை கண்காணிக்கவும் மதிப்பிடவும் ஒரு பொறிமுறை தயாரிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது.		
19	**மனிதவள திட்டத்தைத் தயாரித்தல்.**			
19.1	ஆளணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வருடத்துக்கு 12 மணித்தியாலங்களுக்கு குறையாத விதத்தில் பயிற்சி வாய்ப்புக்கள் மேற்குறிப்பிட்ட மனிதவள திட்டத்தினுள் உள்ளடக்கியுள்ளமை.			பொருத்தமற்றது
19.2	மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் அடிப்படையில் மொத்த ஆளணியினருக்கும் வருடாந்த செயற்சாதனை உடன்படிக்கை கைசாத்திட்டிருத்தல்.			பொருத்தமற்றது.
19.3	மேற்குறிப்பிட்ட சுற்றுநிருபத்தின் 6.5 பந்திக்கு அமைவாக மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை தயார்செய்தல், இயற்றிறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல், திறன் விருத்தி			பொருத்தமற்றது

	நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் போன்ற பொறுப்புக்களுக்கு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்திருத்தல்.			
20	**கணக்காய்வு பதிவுகளுக்கான துலங்கல்**			
20.1	முந்திய வருடத்துக்காக கணக்காய்வாளரால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு பத்திகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் சரிசெய்யப்பட்டுள்ளன.	இணக்கமானது.		

பதிவாளர் - உயர் நீதிமன்றம்

MANODHI HEWAWASAM
Registrar of the Supreme Court/
Judge of the Sri Lanka Judicial Service